## குலசேகரப் பெருமாள் அருளிச் செய்த
## பெருமாள் திருமொழி

## இரண்டாம் திருமொழி - தேட்டறும் திறல்
## அரங்கன் மெய்யடியாரது அடிமைத் திறத்தில் ஈடுபடுதல்

** தேட்டரும் திறல் தேனினைத் *
தென்னரங்கனை * திருமாது வாழ்
வாட்டமில் வனமாலை மார்வனை வாழ்த்தி *
மால் கொள் சிந்தையராய் **
ஆட்டமேவி அலந்தழைத்து * அயர்வெய்தும்
மெய் அடியார்கள் தம் *
ஈட்டம் கண்டிடக் கூடுமேல் * அது
காணும் கண் பயன் ஆவதே 1

தோடுலா மலர்மங்கை தோளிணை தோய்ந்ததும் *
சுடர் வாளியால் *
நீடு மாமரம் செற்றதும் நிரை மேய்த்ததும் *
இவையே நினைந்து **
ஆடிப் பாடி அரங்கவோ! என்றழைக்கும் *
தொண்டர் அடிப்பொடி
ஆட நாம் பெறில் * கங்கை நீர் குடைந்தாடும்
வேட்கை * என்னாவதே? 2

ஏறடர்த்ததும் ஏனமாய் நிலம் கீண்டதும் *
முன் இராமனாய் *
மாறடர்த்ததும் மண் அளந்ததும் *
சொல்லிப் பாடி ** வண்பொன்னிப் பேர்
ஆறு போல் வரும் கண்ண நீர் கொண்டு *
அரங்கன் கோயில் திருமுற்றம் *
சேறு செய் தொண்டர் சேவடிச் * செழுஞ்சேறென்
சென்னிக்கணிவனே 3

தோய்த்த தண்தயிர் வெண்ணெய் பால் உடன்
உண்டலும் * உடன்றாய்ச்சி கண்டு *
ஆர்த்த தோளுடை எம்பிரான் * என்
அரங்கனுக்கடியார்களாய் **
நாத் தழும்பெழ நாரணா என்று அழைத்து *
மெய் தழும்பத் தொழுது
ஏத்தி * இன்புறும் தொண்டர் சேவடி *
ஏத்தி வாழ்த்தும் என் நெஞ்சமே 4

பொய் சிலைக் குரல் ஏற்றெருத்தம்
இறுத்துப் * போர் அரவீர்த்த கோன் *
செய் சிலைச் சுடர் சூழ் ஒளித் * திண்ண
மாமதிள் தென்னரங்கனாம் **
மெய் சிலைக் கருமேகம் ஒன்று * தம்
நெஞ்சில் நின்று திகழப் போய் *
மெய் சிலிர்ப்பவர் தம்மையே நினைந்து *
என் மனம் மெய் சிலிர்க்குமே 5

ஆதி அந்தம் அனந்தம் அற்புதமான *
வானவர் தம் பிரான் *
பாத மாமலர் சூடும் பத்தி இலாத *
பாவிகள் உய்ந்திட **
தீதில் நன்னெறி காட்டி * எங்கும்
திரிந்தரங்கன் எம்மானுக்கே *
காதல் செய் தொண்டர்க்கெப்பிறப்பிலும் *
காதல் செய்யும் என் நெஞ்சமே 6

கார் இனம் புரை மேனி நற்கதிர் *
முத்த வெண்ணகைச் செய்ய வாய் *
ஆர மார்வன் அரங்கன் என்னும் *
அரும்பெரும் சுடர் ஒன்றினை **
சேரும் நெஞ்சினராகிச் * சேர்ந்து
கசிந்திழிந்த கண்ணீர்களால் *
வார நிற்பவர் தாளிணைக்கு *
ஒரு வாரமாகும் என் நெஞ்சமே 7

மாலையுற்ற கடல் கிடந்தவன் *
வண்டு கிண்டு நறுந்துழாய் *
மாலையுற்ற வரைப் பெரும் திருமார்வனை *
மலர்க் கண்ணனை **
மாலையுற்று எழுந்தாடிப் பாடித் *
திரிந்தரங்கன் எம்மானுக்கே *
மாலையுற்றிடும் தொண்டர் வாழ்வுக்கு *
மாலையுற்றதென் நெஞ்சமே 8

மொய்த்துக் கண் பனி சோர மெய்கள்
சிலிர்ப்ப * ஏங்கி இளைத்து நின்று *
எய்த்துக் கும்பிடு நட்டம் இட்டெழுந்து *
ஆடிப் பாடி இறைஞ்சி ** என்
அத்தன் அச்சன் அரங்கனுக்கடியார்களாகி *
அவனுக்கே
பித்தராம் அவர் * பித்தர் அல்லர்கள் *
மற்றையார் முற்றும் பித்தரே 9

** அல்லி மாமலர் மங்கை நாதன் *
அரங்கன் மெய்யடியார்கள் தம் *
எல்லையில் அடிமைத் திறத்தினில் *
என்றுமேவு மனத்தனாம் **
கொல்லி காவலன் கூடல் நாயகன் *
கோழிக் கோன் குலசேகரன் *
சொல்லின் இன்தமிழ் மாலை வல்லவர் *
தொண்டர் தொண்டர்கள் ஆவரே 10

**குலசேகரப் பெருமாள் திருவடிகளே சரணம்**

---